# 20

# உங்கள் பிள்ளைகளுக்குப் போதிக்க மூன்று சத்தியங்கள் (5:1-8)

*ரோமர் 5ம் அதிகாரமானது பவுலின் சிந்தனையின் படிப்படியான வளர்ச்சியில் எவ்வாறு பொருந்துகிறது என்பதுபற்றி எழுத்தாளர்கள் கருத்து வேறுபடுகின்றனர். சிலர் இந்த அதிகாரம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் மீதான பவுலின் போதனையை உச்சப்படுத்துகிறது என்று நினைக்கிறவேளையில், மற்றவர்கள் இதைப் பின்தொடரும் மற்ற அதிகாரங்களுடன் இடுகின்றனர். இது நீதிமானாக்கப்படுதல் மற்றும் பரிசுத்தமாக்கப்படுதல் என்ற இரண்டு ஆய்வுக்கருத்துகளுக்கு இடையில் ஒரு பாலமாகச் செயல்படுகிறது.*

*3:21-4:25ல், பவுல் நீதிமானாக்கப்படுதல் என்பது விசுவாசத்தின் அடிப்படையிலேயே அமைகிறது என்பதைக் காண்பிக்க வேதவசனங்களையும் தர்க்கவாதத்தையும் பயன்படுத்தினார். இப்போது, அந்த கொள்கையை நிலைநாட்டியுள்ள நிலையில், நீதிமானாக்கப்பட்டிருத்தலின் ஆசீர்வாதங்களைப் பட்டியலிடுவதற்கு அவர் தயாரானார். வில்லியம் பார்க்ளே என்பவர், ரோமர் 5ம் அதிகாரத்தின் முதல் பகுதியானது, பவுலின் "பாடல் வசனப்பகுதியாக உள்ளது, இதில் அவர் தேவன்மீது தான் கொண்டுள்ள தைரியமான நம்பிக்கையினாலான உள்ளான சந்தோஷத்தை ஏறக்குறையப் பாடுகிறார்" என்று எழுதினார்.[1]* R. C. *பெல் என்பவர், "கிறிஸ்தவத்தின் எல்லையற்ற ஆதாரமூலத்தை விளிம்பு வரை நிரம்பிவழியும் நிலையில் கொண்டுள்ள வேறொரு வேதவசனத்தைக் காண்பது மிகவும் அரிது" என்று கூறினார்.[2]*

*இந்த மற்றும் இதற்கு அடுத்த பாடங்களில், நாம் 5:1-11ஐப் பற்றிப் படிப்போம். இவ்வசனப்பகுதி பவுல் பல கடினமான சோதனை வேளைகளில் உயிர்பிழைத்திருக்க (2 கொரிந்தியர் 11:23-29ஐக் காணவும்) - அவற்றைச் சகித்திருக்க மாத்திரமல்ல, ஆனால் அவற்றின் மீது வெற்றிகொண்டிருக்க - முடிந்தது எவ்வாறு என்பதை நாம் புரிந்துகொள்ள உதவுகிறது (ரோமர் 8:37ஐக் காணவும்). அவர் எந்த இடர்ப்பாடுகளை எதிர்கொண்டிருந்தாலும், அவர் சமாதானமும் நம்பிக்கையும் கொண்டிருந்தார் (5:1, 2, 4, 5). அவர் தம்மைத் தேவன் அன்புகூர்ந்தார் என்பதை அறிந்திருந்தார் (5:5-9). அவரது விரோதிகள் அவரைக் கொன்று போட்டாலும், அவர் நித்தியத்திற்கும் இரட்சிக்கப்பட்டிருப்பார் - அவர் தேவனுடன் மகிமையில் இருப்பார் என்று அவர் அறிந்திருந்தார் (5:2, 9, 10).*

*பவுல் தாம் போதித்தவர்களுடன் இந்த உறுதிப்பாட்டைப் பகிர்ந்து கொள்ள விரும்பினார். நாம் போதிக்கிற ஒவ்வொருவரும்கூட ரோமர் 5:1-11ன் சத்தி*

*யங்களை அறிதல் அவசியமாக உள்ளது. குறிப்பாக, நாம் நமது பிள்ளைகளின் சிந்தைகளில் இந்தக் கருத்துக்களைப் பதிய வைத்தல் அவசியமாக உள்ளது.[3] நான் இப்பாடத்தை "உங்கள் பிள்ளைகளுக்குப் போதிக்க மூன்று சத்தியங்கள்" என்று அழைக்கிறேன்.*

## போராட்டம் இல்லாதபோதல்ல, ஆனால் கர்த்தருடைய பிரசன்னத்திலேயே சமாதானம் காணப்படுகிறது (5:1, 2)

*"சமாதானத்தைத் தேடுதல் என்பது உலகளாவிய வகையில் மனிதரை ஆட்டிப்படைக்கும் செயலாக உள்ளது,"[4] ஆனால் சமாதானம் என்பது போராட்டம் இல்லாதநிலை என்பதாகப் பெரும்பான்மையானவர்கள் நினைக்கின்றனர். சிலவேளைகளில் அமைதியின் நிலையொன்று அவ்வப்போது நிலவுகிறது, ஆனால் ஒரு விஷயம் உறுதியானதாக உள்ளது: அது விரைவிலேயே சிதறடிக்கப்படும். பாவத்தினால் நோய்ப்பட்ட இந்த உலகத்தில் கொந்தளிப்பு என்பது விதிவிலக்காக அல்ல, ஆனால் விதியாக உள்ளது. நமது பிள்ளைகள், வாழ்வின் உண்மைநிலைக்குத் தயாராக இருக்க வேண்டுமென்றால், உண்மை யான சமாதானம் என்பது போராட்டம் இல்லாத நிலையில் அல்ல, ஆனால் கர்த்தருடைய பிரசன்னத்தில்தான் உள்ளது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.*

***நாம் சமாதானம் பெற்றுள்ளோம்! (வசனம் 1)***

*பவுல் 5ம் அதிகாரத்தை "இவ்விதமாக" என்று தொடங்கினார். இந்த அதிகா ரத்தில் அவர் கூறவந்த விஷயமானது, நீதிமான்களாக்கப்படுதல் பற்றிய முந்திய கலந்துரையாடலின் அடிப்படையில் அமைந்திருந்தது. "இவ்வித மாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், … தேவனிடத்தில் சமாதானம்[5] பெற்றிருக்கிறோம்" (வசனம் 1). நாம் நியாயப்பிர மாணத்தைப் பூரணமாகக் கடைப்பிடிக்க இயலாது என்பதால், நியாயப்பிர மாணம்/கிரியைகள் முறைமையானது சலிப்பையும் சந்தேகத்தையும் உண்டாக்குகிறது. இதற்கு எதிரிடையாக, தேவனுடைய கிருபை/விசுவாசம் முறைமையானது சமாதானத்தை விளைவிக்கிறது.*

*"தேவனுடன் சமாதானம்" என்ற சொற்றொடர் எண்ண உணர்வை யல்ல, ஆனால் மெய்மையான சத்தியத்தைக் குறிக்கிறது: நாம் நீதிமான் களாக்கப்பட்டுள்ளதால், நாம் தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டுள்ளோம் (வசனங்கள் 10, 11). நாம் இனியும் தேவனுக்குப் பகைஞரல்ல, ஆனால் அதற்கு மாறாக நாம் அவருக்குச் சிநேகிதர்களாக இருக்கிறோம். "வெறுப்புணர்வுகள் முடிந்து போயின; சமாதான உடன்படிக்கை கையெழுத்தாகியுள்ளது."[6]*

*நாம் "தேவனுடன் சமாதானம்" கொண்டுள்ளதால், "எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம்" (பிலிப்பியர் 4:7) என்ற அந்த ஆச்சரியமான உணர்வை நம்மால் மகிழ்வுடன் அனுபவிக்க முடியும். இந்த சமாதானம் என்பது உலகத்தில் எல்லா விஷயமும் [நமக்கு] சரியாக இருத்தல் என்பதைச் சார்ந்தது அல்ல; இது உணர்வுப்பூர்வமான நிறைவைக் காட்டிலும் மேலான விஷயமாக உள்ளது. தேவ னுடன் இசைவிணக்கமான உறவுமுறை என்பதே இப்படிப்பட்ட சமாதா*

*னத்தின் ஆதாரமூலமாக உள்ளது, அந்த உறவுமுறைதான், புறம்பான சூழ்நிலைகள் எப்படியிருப்பினும் திருப்தியின் உணர்வு ஒன்றை உண்டாக்க முடியும் (5:3, 4ஐக் காணவும்). நாம் கிறிஸ்தவர்களாக இருந்து[ம்] தேவசமாதானத்தில் குறைவு இருக்கிறதென்றால், அது ஒருவேளை, நாம் தேவனுடன் சமாதானமாயிருத்தல் என்பது எதனை அர்த்தப்படுத்துகிறது என்பது முழுமையாக மதித்து உணராததாலேயே அவ்வாறு இருக்கலாம்.*

*நாம் "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய்" தேவனிடத்தில் இந்த சமாதானம் பெற்றிருக்கிறோம் (வசனம் 1ஆ). தேவனுடன் சமாதானம் என்பது இயேசு தமது பிதாவுடன் நம்மை ஒப்புரவாக்குவதற்காக மரித்ததினால் சாத்தியமாயிற்று (வசனங்கள் 6-8, 10, 11). 5:1-11ஐக் கண்ணோட்டமிட்டு, நமது ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் கிறிஸ்துவின் "மூலம்" இருக்கின்றன என்று பவுல் எவ்வளவு அடிக்கடி கூறினார் என்பதைக் கவனியுங்கள் (வசனங்கள் 1, 2, 9-11).*

***நாம் கிருபையில் நிற்கிறோம்! (வசனம் 2)***

*2ம் வசனம் பவுலின் "மூலமாய்" கூற்றுக்களில் ஒன்றுடன் தொடங்குகிறது: "அவர் [இயேசு] மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால்*[7] *பெற்று நிலைகொண்டிருந்து ... ."*

*"பெற்று" என்று தமிழிலும்* "our introduction" *என்று ஆங்கிலத்திலும் உள்ள சொற்றொடர், "பிரசன்னத்தில் வழிநடத்துதல் அல்லது கொண்டுவருதல்" என்று அர்த்தப்படுகிற prosagoge* (*pros* ["to"] *கூட்டல் ago* ["to lead"]) *என்ற கூட்டு வார்த்தையில் இருந்து வருகிறது.*[8] *இயேசு நம்மை தேவனுடைய அரியணை அறைக்கு வழிநடத்திச்சென்று, தமது முகத்தில் புன்னகையுடன், "நான் உன்னை எனது சிநேகிதனிடத்தில் அறிமுகம் செய்துவைக்கிறேன்!" என்று கூறுவதுபற்றி நாம் நினைத்துப் பார்க்கலாம்.*[9]

*"நாம் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை" பெற்றிருக்கிறோம் என்று பவுல் கூறினார். இது, " 'கிருபை' என்ற வார்த்தையைப் பயன்படுத்தும் அசாதாரண வழியாக உள்ளது."*[10] *கிருபை* (*charis*) *என்பது நாம் கிறிஸ்தவராகும்போது நமது பாவங்களின் குற்றத்தில் இருந்து நம்மை மீட்கிறது என்று நாம் வழக்கமாக நினைக்கிறோம். இருப்பினும், இவ்விடத்தில், "கிருபை" என்பது, நாம் நீதிமான்களாக்கப்படும்போது நாம் அறிமுகப்படுத்தப்படுகிற "கிருபையின்நிலை"*[11]*யைக் குறிக்கிறது.* NEB *வேதாகமத்தில்,* "the sphere of God's grace" *என்றிருக்கையில்,* AB *வேதாகமம் இதை* "state of God's favor" *என்று அழைக்கிறது.*

*நாம் இரட்சிக்கப்படுவதற்கு மாத்திரமல்ல, ஆனால் இரட்சிக்கப்பட்டவர்களாக நிலைத்திருப்பதற்கும் கிருபை தேவைப்படுகிறது. நாம் கிறிஸ்தவர் என்ற வகையில் மகிழ்வுடன் அனுபவிக்கும் எந்த ஆசீர்வாதத்தையும் ஈட்டவோ அல்லது அதற்கு நம்மை தகுதியாக்கிக் கொள்ளவோ முடியாது. கிருபையினால்தான் நமது அன்றாட அளிப்புகள் கிடைக்கின்றன. நாம் தொடர்ந்து பாவம் செய்கிறோம், கிருபையினால் நமது பாவங்களுக்கு மன்னிப்பு உள்ளது. கிருபையினாலேயே அன்றாடம் வாழ்விற்குப் பலம் உள்ளது. ஜான் நியூட்டன் என்பவர், "கிருபை என்னை இம்மட்டும் பாதுகாப்பாகக் கொண்டுவந்தது, மற்றும் கிருபை என்னை இல்லத்திற்கு வழி நடத்தும்" என்று*

எழுதினார்.[12]

நீதிமானாக்கப்படுதல் நம்மை "நாம் நிலைகொண்டிருக்கிற" [*histemi*] இந்த ஆச்சரியமான கிருபையின் நிலைக்குள் கொண்டுவருகிறது என்று பவுல் கூறினார். சிலர், "நிலைகொண்டிருந்து" என்ற இச்சொற்றொடர்மூலம் பவுல் கூறநோக்கங்கொண்டு இருந்ததைவிட இதை அதிகமாக்க முயற்சி செய்கின்றனர். அவர்கள், "நாம் நிலைகொண்டிருந்து" என்பது நமது கிருபையின் நிலைப்பாடு நிரந்தரமானதாக உள்ளது, "கிருபையில் இருந்து விழுதல்" சாத்தியமற்றது என்று அர்த்தப்படுத்துவதாக விளக்கம் தருகின்றனர். பவுல், கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில், "கிருபையில் இருந்து விழுந்துபோன" சிலர் பற்றிப் பேசினார் என்ற உண்மையிருப்பினும்கூட (கலாத்தியர் 5:4; 1 கொரிந்தியர் 10:12ஐக் காணவும்), அவர்கள் இந்த விளக்கத்தை வலியுறுத்துகின்றனர்.

"நிலைகொண்டிருத்தல்" என்ற வார்த்தையானது அடிக்கடி உறுதியாய் நிலைநிற்குதலைச் சுட்டிக்காண்பிக்கிறது (எபேசியர் 6:14ஐக் காணவும்). நாம் தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர், சுயாதீனம் உள்ள ஒழுக்க முகவர்களாக இருந்தோம், நாம் அவரது கிருபையினால் இரட்சிக்கப்பட்டுள்ள பின்பும்கூட சுயாதீனமுள்ள ஒழுக்க முகவர்களாகவே நிலைத்திருக்கிறோம். நாம் கிறிஸ்தவராவதற்கு முன்னர் தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொள்ளவோ அல்லது புறக்கணிக்கவோ முடிந்திருக்கும் என்றால், நாம் கிறிஸ்தவரான பின்னரும் அதை ஏற்றுக்கொள்ளவோ அல்லது புறக்கணிக்கவோ முடியுமே. இவ்வாறு பவுல், தீமோத்தேயுவை, "கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு" என்று வேண்டிக்கொண்டார் (2 தீமோத்தேயு 2:1). பேதுரு தமது வாசகர்களிடத்தில் "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் ... வளருங்கள்" என்று கூறினார் (2 பேதுரு 3:18அ).

"நிலைகொண்டிருந்து" என்ற சொற்றொடரை அது கூறுவதற்கு *அதிகமாக* விளக்கம் தருவதாக ஏற்படுத்த நாம் முயற்சிசெய்யக்கூடாது, ஆனால் அதை *குறைவாகக்* கூறுவதாகவும் நாம் ஏற்படுத்தக் கூடாது. வார்த்தைகள் முழு உறுதிப்பாடும் தைரியமும் நிறைந்துள்ளன. AB வேதாகமத்தில், "in which we [firmly and safely] stand" என்றுள்ளது. ரோமர் 8ல் பவுல் "தேவன் நம் பட்சத்திலிருக்கிறார்" என்று வலியுறுத்தினார் (வசனம் 31); அவர் நமது பட்சத்தில் முன்கூட்டியே அனுகூலமான நிலையில் இருக்கிறார்! அவர் நம்மை அழிப்பதற்கல்ல, ஆனால் நம்மை இரட்சிக்கவே விரும்புகிறார். நாம் தேவனுக்கு நமது முதுகைக் காண்பித்துத் திரும்ப முடியும் - கவலைக்குரிய வகையில் சிலர் இவ்வாறு செய்கின்றனர். இருப்பினும், நாம் இயேசுவில் விசுவாசம் கொண்டு அந்த விசுவாசத்தை கீழ்ப்படிதல் மூலமாக வெளிப்படுத்திக்கொண்டிருக்கும் வரையிலும், நாம் "தேவனுடைய தயவைப்பெற்ற நிலையில்" தொடர்ந்து "தேவனுடைய கிருபையின் வட்டாரத்திற்குள்" நிலைநிற்கிறோம்! அது நமது இருதயங்களுக்குச் சமாதானத்தைக் கொண்டுவரவில்லை என்றால், வேறெதுவும் அதைக் கொண்டுவராது!

**நாம் நம்பிக்கையில் சந்தோஷப்படுகிறோம்! (வசனம் 2ஆ)**

தேவனுடைய கிருபை மற்றும் அது கொண்டுவரும் சமாதானம் ஆகியவற்றின் விளைவாக, "தேவமகிமையை அடைவோமென்கிற

நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம்" (வசனம் 2ஆ). 5:1-11ல், பவுல் "மேன்மைபாராட்டுகிறோம்" என்று மூன்றுமுறைகள் கூறினார் (வசனங்கள் 2, 4, 11). "மேன்மைபாராட்டுதல்" என்பது நான் வாழும் இடத்தில் சாதாரணமாகப் பயன்பாட்டில் உள்ள வார்த்தையல்ல. NIV வேதாகமம் இவ்வசனங்களில் அதிகம் பழக்கமான "rejoice" ["அகம் மகிழ்தல்"] என்ற வார்த்தையைக் கொண்டுள்ளது.

"மேன்மைபாராட்டுதல்" மற்றும் "அகம்மகிழ்தல்" ஆகியவற்றிற்கான (*kauchaomai* என்ற) கிரேக்க சொற்றொடர், இதற்கு முந்திய இடங்களில் (2:17, 23; 3:27; 4:2) "boast" [தமிழ் வேதாகமத்தில் இவ்விடங்களிலும் "மேன்மைபாராட்டல்" என்றே உள்ளது] என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, சில மொழிபெயர்ப்புகள் அந்த வார்த்தையை இவ்விடத்தில் பயன்படுத்துகின்றன (NRSV; CJB; JB). நாம் செய்துள்ளவற்றைக் குறித்து *நாம்* தற்பெருமையாய்ப் பேசிக்கொண்டிருக்கக் கூடாது, ஆனால் *தேவன்* செய்துள்ளவற்றைக் குறித்து நாம் பெருமையாய்ப் பேசுவதில் தவறில்லை (1 கொரிந்தியர் 1:31; கலாத்தியர் 6:4 ஆகியவற்றைக் காணவும்). 5:11ல் பவுல் "நாம் தேவனைப்பற்றியும் மேன்மைபாராட்டுகிறோம்" என்று கூறினார். 15:17ல் அவர் "தேவனுக்குரியவைகளைக் குறித்து இயேசுகிறிஸ்துவைக் கொண்டு மேன்மைபாராட்ட இடம்" உள்ளதென்று உரைத்தார். இருந்தபோதிலும், நம்மில் சிலர் "rejoice" என்பதுபோன்ற வார்த்தையை மிகவும் ஆறுதலானதாக உணருகிறோம், எனவே எனது விளக்கங்களில் நான் அந்த வார்த்தையையே பயன்படுத்துவேன்.

நாம் "நம்பிக்கையி"னாலே மேன்மைபாராட்டுகிறோம் என்று பவுல் கூறினார். நம்பிக்கை என்பது முக்கியமானதாக உள்ளது; நம்பிக்கை நம்மை நிலைநிறுத்துகிறது மற்றும் நம்மைத் தொடர்ந்து முன்னேறிச் செல்லும்படி காத்துக்கொள்கிறது (எபிரெயர் 6:19ஐக் காணவும்). ஒருமுறை, ஒரு சிறுபையன் ஒரு மருத்துவமனையின் தீக்காய மையத்தில் இருந்தான். அவனது உடல்முழுவதிலும் ஏற்பட்டிருந்த மூன்றாம் நிலைத் தீக்காயங்களினால் அவன் அவதிப்பட்டுக் கொண்டிருந்தான். அவன் காயங்கள் ஆறி சாதாரண நிலை அடைவதை நோக்கிச் சிறிதளவே முன்னேறிக் கொண்டிருந்த வேளையில் ஒருநாள் அவனது அறைக்கு வந்த ஒரு ஆசிரியர், "நீ உனது பள்ளிப்படிப்பு பணியில் மிகவும் பின் தங்கியிருப்பதில் இருந்து உன்னை மீட்பதற்காக நான் அனுப்பப்பட்டுள்ளேன்" என்று கூறினார். அந்தப்பையனின் உடல்நிலை உடனடியாக முன்னேறத் தொடங்கிற்று. அவன், "நான் இறக்கப்போவதாக இருந்திருந்தால், அவர்கள் ஒரு ஆசிரியரை அனுப்பியிருக்க மாட்டார்கள்" என்று கூறினான்.[13] கடைசியில் அவன் நம்பிக்கை பெற்றிருந்தான்!

முந்திய பாடம் ஒன்றில் குறிப்பிடப்பட்டது போன்று, வேதாகம நம்பிக்கை என்பது விருப்பம் நிறைந்த நினைவாக மாத்திரம் அல்ல, ஆனால் விருப்பமும் எதிர்பார்ப்பும் கூடியதாக உள்ளது. பார்க்ளே என்பவர், "கிறிஸ்தவ நம்பிக்கை என்பது, பயந்து நடுங்குகிற, ஒருவேளை தேவனுடைய வாக்குத்தத்தங்கள் உண்மையானவைகளாக இருக்கலாம் என்று தயக்கமான நம்பிக்கை கொண்டிருத்தல் அல்ல. அவைகள் சத்தியத்தைத் தவிர வேறெதுவாகவும் இருக்க முடியாது என்று தைரியமாக எதிர்பார்த்திருத்தலே கிறிஸ்தவ நம்பிக்கையாகும்" என்று எழுதினார்.[14] எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், நமது நம்பிக்கை "நிலையும் உறுதியுமானதாக" உள்ளதென்று கூறினார் (எபிரெயர் 6:19).

*தமது சிந்தனையைத் தொடர்ந்த பவுல், "தேவமகிமையில் [doxa]" நமது நம்பிக்கை உள்ளது என்று கூறினார் (வசனம் 2ஆ). இது ஒருநாளிலே நாம் தேவமகிமையைக் காண்போம் என்ற நமது நம்பிக்கையைக் குறிக்கலாம் (மாற்கு 13:26; தீத்து 2:13 ஆகியவற்றைக் காணவும்). இது பரலோகத்தில் நாம் அவரது தெய்வீக மகிமையில் பங்கடைவதை அர்த்தப்படுத்தலாம்* (RSV; REB; CJB *வேதாகமங்களில் காணவும்). ரோமர் 8ல், "கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்" என்று பவுல் கூறினார் (வசனம் 17; 8:18; 9:23 ஆகியவற்றைக் காணவும்). இன்னொருபுறத்தில், "தேவமகிமை" என்பது பூமியின்மீது தேவமகிமையைப் பிரதிபலித்தல் பற்றிய நமது நம்பிக்கையைக் கருத்தாகத் தெரிவிக்கலாம். மனிதகுலமானது "தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கும்படி" உண்டாக்கப்பட்டது (1 கொரிந்தியர் 11:7; ஆதியாகமம் 1:26, 27; 9:6; யாக்கோபு 3:9 ஆகியவற்றைக் காணவும்), ஆனால் மனிதகுலமானது "உடைந்துபோன உருவம்" ஆகியுள்ளது. பாவம் நிறைந்த மக்கள், "அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் மற்றும் ஊரும்பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்" (ரோமர் 1:23). இருந்தபோதிலும், கிறிஸ்துவின் மூலமாக, நாம் "தேவன் நாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று தமது சிந்தையில் கருத்துக்கொண்டுள்ளாரோ, அவ்வாறெல்லாம் ஆக" முடிகிறது (5:2;* LB). *மேல்கூறப்பட்ட யாவற்றையும் "தேவனுடைய கிருபை" சுற்றிச் சூழ்வதற்குச் சாத்தியம் உள்ளது.*

*5:1-11 வசனப்பகுதி முழுவதிலும், பவுல் நீதிமானாக்கப்படுதல் என்பது கடந்த, நிகழ், மற்றும் எதிர்காலங்களில் ஆசீர்வாதங்களைக் கொண்டு வருவதால், அது அகம்மகிழக் காரணமாகிறது என்பதை வலியுறுத்தினார்:*

- *கடந்தகாலம்: நாம் தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டிருக் கிறோம்!*
- *நிகழ்காலம்: நாம் தேவனுடைய கிருபையில் நிலைநிற்கிறோம்!*
- *எதிர்காலம்: நாம் தேவமகிமையின் நம்பிக்கை கொண்டிருக் கிறோம்!*

*இந்த மாபெரும் ஆசீர்வாதங்களைப் புரிந்துகொள்ளுதல் நமது இருதயங் களுக்குச் சமாதானத்தைக் கொண்டுவரவேண்டும்.*

## *இடர்ப்பாடு உங்களை மேன்மையுள்ளவர்களாக்கு கிறதா அல்லது கசப்புள்ளவர்களாக்குகிறதா என்பதை நீங்களே தீர்மானிக்கிறீர்கள் (5:3-5அ)*

*"தேவனிடத்தில் சமாதானம்" பெற்றிருத்தல் என்ற பவுலின் வார்த்தைகளை அவரது வாசகர்கள் ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருக்கையில் (வசனம் 1), ஒருவேளை "ஓ, எல்லாம் சரியாக நடக்கும்வரையில், நாம் நிச்சயமாகவே தேவனுடன் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் நம்பிக்கையையும் கொண்டிருக்க முடியும். ஆனால் மோசமான வேளைகள் வரும்போது விஷயம் என்ன?" என்று நினைத்திருக்கலாம். மோசமான வேளைகள் வரும் என்பதைப்*

பவுல் புரிந்துகொண்டிருந்தார். அவற்றை அவர்தாமே அனுபவித்திருந்தார். புதிதாக மனமாறியிருந்தவர்களுக்கு அவர் "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்" என்று கூறினார் (நடபடிகள் 14:22). இயேசு தமது சீஷர்களிடத்தில், "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு" என்று கூறினார் (யோவான் 16:33). ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்கள், கடினமான வேளைகளை இன்னமும் அனுபவித்திருக்கவில்லை என்றால், அவர்கள் எதிர்காலத்தில் அவற்றை அனுபவிக்க இருந்தனர் (2 தீமோத்தேயு 3:12ஐக் காணவும்).

இடர்ப்பாடு என்பது தவிர்க்க இயலாததாக உள்ளது. விரைவிலேயோ, அல்லது தாமதமாகவோ, நமது பிள்ளைகள் கடுமையாகச் சோதிக்கப் படுவார்கள். வாழ்வின் கடினமான நிதர்சனங்களுக்கு அவர்களை நாம் எவ்வாறு தயார்ப்படுத்த முடியும்? துன்புறுதலின் மதிப்புமீதான புதிய ஏற்பாட்டின் மாபெரும் வேதவசனப்பகுதியான ரோமர் 5:3-5ன் சத்தியங்களை, அவர்கள் மனதில் பதியவைத்தலைக் காட்டிலும் மேன்மையான வழி வேறு எதுவும் இல்லை.[15]

பல ஆண்டுகளுக்கு முன்பு இளைஞராயிருந்த பிரிட்டன் நாட்டுத் தூதர் ஒருவர், சீப்புருத்தீவின் ஆளுநராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார், அப்போது அவர் அரசியலில் கொதிக்கும் சூழ்நிலை ஒன்றில் தாம் இருந்ததைக் கண்டறிந்தார். கவலைப்பட்ட அவரது தந்தையார் அவருக்கு ஆறே ஆறு வார்த்தைகள் கொண்ட தந்தி ஒன்றை ஆனுப்பியிருந்தார்: "இரண்டு கொரிந்தியர் நான்கு, எட்டு மற்றும் ஒன்பது." அந்த இளம் ஆளுநர் வேத வசனப் பகுதியை வாசித்தார்: "நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை, கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை" (2 கொரிந்தியர் 4:8, 9). தனது தந்தையின் மனநிலைக்கு நிம்மதி அளிப்பதற்காக அந்த இளைஞர் ஐந்து வார்த்தைகளைத் தந்தியில் திருப்பி அனுப்பினார்: "ரோமர் ஐந்து, மூன்று மற்றும் நான்கு." இவ்வசனம் நமது வசனப்பகுதியின் பாகமாக உள்ளது: "அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்" (ரோமர் 5:3, 4).[16]

**"உபத்திரவங்கள்" (வசனம் 3)**

3ம் வசனம், "அது மாத்திரமல்ல [நாம் நல்வேளைகளில் அகம்மகிழ்வது மாத்திரமல்ல], ஆனால் உபத்திரவங்களிலேயும் மேன்மைபாராட்டுகிறோம்" என்று தொடங்குகிறது [தமிழ் வேதாகமத்தில் இது 4ம் வசனமாக உள்ளது]. "உபத்திரவங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, "அழுத்துகிற ஒரு அழுத்தம் என்ற முதன்மை அர்த்தம் தருகிற" *thlipsis* என்பதன் பன்மை வடிவமாக உள்ளது.[17] இது ஒலிவ விதைகளில் இருந்து எண்ணெய் அல்லது திராட்சக் கனிகளில் இருந்து ரசத்தைப் பிழிந்தெடுத்தலை விவரிக்கப் பயன்படுத்தப்பட்ட அதே வகையான வார்த்தையாக இருந்தது. "உபத்திரவங்கள்" என்று வரும் இடத்தில், AB வேதாகமம் "pressure and affliction and hardship" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறது. பல விஷயங்கள் கிறிஸ்தவரை

"அழுத்த" கூடும்: "தேவை மற்றும் தொல்லையூட்டும் சூழ்நிலைகள், வருத்தம், துன்புறுத்தப்படுதல், பிரபலமற்றதன்மை, மற்றும் தனிமைப்படுத்தப்படுதல்."[18] உலகவரலாற்றின் பல்வேறு காலகட்டங்களில், "உபத்திரவம்" என்ற வார்த்தை மரணத்தின் அச்சுறுத்துதலை உள்ளடக்கியிருந்துள்ளது.

உபத்திரவங்கள் வரும்போது - அவைகள் வரும் - நமது எதிர்ச்செயல் என்னவாக இருக்க வேண்டும்? புலம்புதல் மற்றும் பெருமூச்சுவிடுதல், முணுமுணுத்தல், மற்றும் முறையிடுதல் என்பவையே பொதுவான எதிர்ச்செயல்களாக உள்ளன. நம்மில் சிலர், உபத்திரவங்கள் வெறுமனே சகிக்கப்பட வேண்டியவை என்று நினைக்கிறோம். இருப்பினும், பவுல் நமக்குப் பிரச்சனைகள் வரும்போது நாம் *சந்தோஷப்பட வேண்டும்* என்று கூறினார். சந்தோஷப்படுதல்? அதை நான் சரியாக வாசித்தேனா? ஒரு மனிதர் தனது முகத்தில் பெரிய புன்னகையுடன் இல்லத்திற்கு வந்து தன் மனைவியிடத்தில், "இன்று உண்மையிலேயே எனக்கு ஒரு நல்ல நாளாக இருந்தது! நான் ஒரு கிறிஸ்தவனாக இருப்பதற்காக நாள் முழுவதும் பிறரால் இகழப்பட்டேன், அனேகமாக நான் என் வேலையை இழக்கப்போகிறேன். அது மிக நல்ல விஷயமல்லவா?" என்று கூறுவதாகக் கற்பனை செய்துபாருங்கள்.[19]

நமது வாழ்வில் உபத்திரவம் வந்துள்ளது என்பதற்காக மாத்திரம் நாம் சந்தோஷப்பட வேண்டும் என்று பவுல் கூறவில்லை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். அவர் வேதனையில் சந்தோஷப்படுகிற வேதனையில் மகிழ்வடையும் நிலையைப் பரிந்துரைக்கவில்லை. மாறாக, அவர் தவிர்க்க முடியாத நிகழ்வுகளும் உபத்திரவங்களும் வரும்போது, சந்தோஷப்படுவதற்கு அப்போதும்கூட நாம் காரணங்கள் கொண்டிருக்க வேண்டும் - ஏனென்றால், நம்மை மேன்மையான மக்களாக்கத் தேவன் நமது பிரச்சனைகளைப் பயன்படுத்தக்கூடும். உபத்திரவம் என்பது *கசப்பான* மரமாக இருக்கலாம், ஆனால் அது ஒரு *கனியற்ற* மரமாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை;[20] அது ஆச்சரியமான கனியை உண்டாக்கக்கூடும்.

### "பொறுமை" (வசனம் 3)

பவுல் நிகழ்ச்சிகளின் வரிசையொன்றை வரைகுறிப்பிடுவதன்மூலம், நாம் உபத்திரவங்களில் எவ்வாறு அகம்மகிழ முடியும் என்பதை விளக்கினார். அவர், "உபத்திரவம் பொறுமையையும் ... உண்டாக்குமென்று நாங்கள் [விசுவாசத்தினால்] அறிந்து"[21] என்று கூறினார் (வசனம் 3). "Perseverance" என்பது *hupomone* என்ற வார்த்தைகளில் இருந்து வருகிறது, இது "[கடின மான சூழ்நிலையின்]கீழ் நிலை நிற்குதல்" என்று அர்த்தப்படுகிறது.[22] இது என்ன நடந்தாலும் - தொடர்ந்து செல்வதற்கு - நிலையாகவும் உறுதியாகவும் நிலைத்து இருத்தலைக் குறிக்கிறது. டேல் ஹார்ட்மேன் என்பவர், இது காலையில் எழுந்து நமது உடைகளை அணிந்துகொண்டு, இன்னும் ஒருநாள் கிறிஸ்துவுக்காக வாழத் தீர்மானம் செய்வதைக் குறிப்பதாகக் கருத்துத் தெரிவித்தார்.[23] அந்த வார்த்தையை பார்க்ளே என்பவர் "fortitude" என்று மொழிபெயர்த்து, இது "செயலற்றவகையில் [வெறுமனே] சகித்துக் கொண்டிருத்தலாக இல்லாமல், ஆனால் வாழ்வின் சோதனைகளையும் உபத்திரவங்களையும் செயல் முனைப்புடன் மேற்கொள்ளுதலாக இருக்கிறது என்று கூறினார்."[24]

சோதனைகளில் இருந்து நேர்மறையான விளைவுகள் தானாகவே

ஏற்படுவதில்லை. பல மக்களுக்கு துன்புறுதல் என்பது சகிப்புத் தன்மையை அல்ல, ஆனால் கசப்புணர்வையும் மனமுறிவையும் உண்டாக்கு கிறது. உபத்திரவத்தை *விசுவாசத்துடன்* நாம் சந்தித்தால் மாத்திரமே அது பொறுமையைக் கொண்டுவரும். நாம் நமது திராணிக்கு மிஞ்சி சோதிக்கப்பட தேவன் அனுமதிக்கமாட்டார் என்று விசுவாசிக்கிறோம் (1 கொரிந்தியர் 10:13). தேவன் சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாகவே நடத்துவார் என்று விசுவாசிக்கிறோம் (ரோமர் 8:28). தேவனுடைய உதவியுடன் நம்மை சோதனைகள் மேன்மையான மக்களாக்க முடியும் என்று விசுவாசிக்கிறோம்.

சோதனைகள் *எவ்வாறு* நம்மை மேன்மையானவர்கள் ஆக்க முடியும்? கொள்கை மிகவும் பழக்கமானதாக உள்ளது. ஒரு தசையானது எதிர்க்கப் பட்டாலன்றி, அது பலமாக வளர இயலாது. உலோக மூலகம் நெருப்பினூடே கடந்து சென்றாலன்றி, அது தூய்மையாக்கப்பட்ட உலோகமாக இயலாது. அதுபோலவே (நினைப்பு மகிழ்வற்றதாக இருந்தாலும்), சோதனைகளின்றி நாம் ஆவிக்குரிய வகையில் இருக்கவேண்டிய பிரகாரமாக ஒருக்காலும் இருக்க இயலாது. டேல் ஹார்ட்மேன் என்பவர் ஆக்லஹாமா கிறிஸ்தவக் கல்லூரியிலிருந்து பட்டம்பெற்றபோது, அவரது ஆசிரியரும் அவரது வழிகாட்டியுமான, ஹியூகோ மெக்கார்டு என்பவர், "உங்களைப் பயன் நிறைந்தவராகக் காத்துக்கொள்வதற்குப் போதுமான அளவு சோதனைகளைத் தேவன் உங்களுக்கு அனுப்ப வேண்டும் என்று நான் ஜெபித்துக்கொள்கிறேன்" என்று கூறினார்![25]

**"பரீட்சை" (வசனம் 3)**


அடுத்ததாகப் பவுல், "பொறுமை பரீட்சையையும் [உண்டாக்குகிறது]" என்று கூறினார் (வசனம் 3). "பரீட்சை" என்பது *dokime* என்ற வார்த்தையில் இருந்து வருகிறது, இது "புதிய ஏற்பாட்டில் சுத்தமாகப் பவுலுக்கே உரிய வார்த்தையாகும் ... இது 'சோதித்தல்' [*dokimazo*] என்ற வார்த்தையுடன் தொடர்புடையது, மற்றும் இது சோதிக்கப்படுதலுக்கு நிலைநிற்கும் பண்பாக உள்ளது."[26] தீவிரமான பிரச்சனை எதையும் கொண்டிராத கிறிஸ்தவர் சோதிக்கப்படாத கிறிஸ்தவராக இருக்கிறார். தனக்கு ஏற்படும் சோதனைகளைத் தேவனுடைய உதவியுடன் வெற்றிகரமாகச் சந்தித்திருக்கும் ஒருவர்/ஒருத்தி, "சோதிக்கப்பட்டவரா[ளா]க"வும் "நிரூபிக்கப்பட்டவரா[ளா]க"வும் இருக்கிறார்[ள்]. புதிதாய் வேலைக்குத் தேர்ந்துகொள்ளப்பட்டுள்ளவருக்கும் யுத்தத்தினால் சோதிக்கப்பட்ட அனுபவசாலிக்கும் இடையில் வேறுபாடு உள்ளது. கிறிஸ்துவுக்குள் "குழந்தை"யாக இருப்பதற்கும் தேவனுடைய "பக்குவப்பட்ட" பிள்ளையாக இருப்பதற்கும் இடையில் வேறுபாடு உள்ளது (எபிரெயர் 5:13, 14). "பரீட்சிக்கப்பட்ட" ஒரு கிறிஸ்தவர் நம்பிக்கைக்கு உரியவராகவும் சார்ந் திருக்கப்படக் கூடியவராகவும் உள்ளார். அவர் கடந்தகாலத்தில் தம்மை விசுவாசம் நிறைந்தவராகக் காண்பித்திருப்பதால், சகோதரர்கள் அவரைச் சார்ந்திருக்க தயங்கமாட்டார்கள்.

**"நம்பிக்கை" (வசனம் 3)**

"பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறது" என்று கூறுவதன்மூலம் பவுல் தமது கூற்றுவரிசையை நிறைவுசெய்தார் (வசனம் 3). கர்த்தருக்குள்

விசுவாசத்துடன் நாம் நமது உபத்திரவங்களை சந்திக்கும்போது, நாம் பொறுமையாயிருக்கக் கூடியவர்கள் ஆகிறோம். பொறுமையாயிருப்பதினால் நாம் ''பரீட்சையைச் சந்திக்கிறோம்'' மற்றும் ஆவிக்குரிய வகையில் பக்குவப்படுகிறோம். இவை யாவும் நம்மை, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிச்சயமானவை என்று நம்பி இணங்கச் செய்கின்றன (2 கொரிந்தியர் 1:20ஐக் காணவும்). தேவன் ஒருபோதும் நம்மை விட்டு விலகுவதும் இல்லை நம்மைக் கைவிடுவதும் இல்லை என்று வாக்குத்தத்தம் செய்தார் (எபிரெயர் 13:5), மற்றும் அவர் அவ்வாறு செய்ததில்லை. தேவன் நமது திராணிக்குமிஞ்சி நாம் சோதிக்கப்பட இடங்கொடுப்பதில்லை என்று வாக்குத்தத்தம் செய்தார் (1 கொரிந்தியர் 10:13), மற்றும் அவர் அவ்வாறு செய்வதில்லை. அவர் நமது வாழ்வில் ஈடுபாடு கொண்டு, சகலத்தையும் நமது நன்மைக்கு ஏதுவாக நடப்பிப்பதாக வாக்குத்தத்தம் செய்தார் (ரோமர் 8:28), மற்றும் அவர் தமது வார்த்தைக்கு உண்மையுள்ளவராக இருக்கிறார். இவ்வாறு தேவனுக்குள்ளும் அவரது வாக்குத்தத்தங்களுக்குள்ளும் நாம் கொண்டுள்ள *நம்பிக்கை,* நாளுக்குநாள் வளருகிறது.

பவுலின் கூற்றுவரிசைத் தொடர் நம்பிக்கையைக் கொண்டு அறிமுகப் படுத்தப்பட்டு (வசனம் 2), நம்பிக்கையைக் கொண்டு முடிகிறது (வசனம் 3). இதை நாம் "உள்ளிணைவுகொண்ட பயன்களின் வட்டம்" என்ற வகையில் நினைக்கலாம்.[27]




பவுல், "அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது" என்று கூடுதலாகக் கூறினார் (வசனம் 5ஆ). "வெட்கப்படுத்தாது" என்பது "வெட்கப்படுத்துதல்" (*aischuno* ["வெட்கம்"] என்பது *kata* என்பதால் பலப்படுத்தப்பட்ட) *kataischuno* என்ற வார்த்தையிலிருந்து வருகிறது. "வெட்கம்" [இது ஆங்கிலத்தில் ''disappoint'' என்றுள்ளது] என்பது 1:16ல் "வெட்கப்படுத்துதல்" என்பதற்குரிய அதே வேர்வார்த்தையைக் கொண்டுள்ளது. பவுலின் சிந்தனை பல்வேறு வழிகளில் விளக்கியுரைக்கப்பட முடியும். நமது நம்பிக்கை நம்மை ஒருபோதும் சங்கடப்படுத்தாது; அது நம்மைக் கீழாக்க அனுமதிக்காது. நாம் சிலவற்றைப் பெறுவோம் என்று நம்பி எதிர்பார்த்திருந்து அதைப் பெற வில்லை என்று மற்றவர்களிடத்தில் கூறுதல் மிகவும் சங்கடத்திற்கு உரியதாக உள்ளது - ஆனால் ரோமர் 5ல் உள்ள நம்பிக்கை அப்படிப்பட்டதல்ல.

*தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளது எதுவோ, அது நடைபெறும். கர்த்தர்மீது நாம் கொண்டுள்ள நமது நம்பிக்கை நம்மைக் கீழாக்காது, ஏனென்றால் கர்த்தர் நம்மைக் கீழாக்கமாட்டார்.*

*நீங்கள் கொண்டுள்ள நிலைப்பாடு பற்றி நான் அறிவதில்லை. ஒருவேளை நீங்கள் இயல்பாகவே அனைத்திலும் நன்மையே விளையும் என்ற எண்ணப்போக்கு உடையவராக இருக்கலாம். ஒருவேளை நீங்கள் தீமையே விளையும் என்ற எண்ணப்போக்கிற்குச் சாய்ந்தவராக இருக்கலாம், அல்லது நீங்கள் உங்களை உண்மை வாதி என்று அழைக்கலாம். இருப்பினும், ஒரு கிறிஸ்தவர் என்ற வகையில், மிகவும் முக்கியமான விஷயத்தைப் பொறுத்தமட்டில் நீங்கள் "எதிலும் நன்மையே விளையும் என்ற எண்ணப்போக்கு" உடையவராக இருக்கமுடியும்: நீங்கள் எதிர்காலத்திற்காக நம்பிக்கை கொண்டிருக்கவும் நீங்கள் ஏமாற்றம் அடையமாட்டீர்கள் என்று அறியவும் முடியும்.*

*இதை நீங்கள் அறிவது அவசியமா? ஆம். நீங்கள் யாருக்குப் போதிக்கிறீர்களோ, அவர்கள் இதை அறிய வேண்டுமா? ஆம். உங்கள் பிள்ளைகள் இதை அறிய வேண்டுமா? நிச்சயமாக! அவர்கள் தங்கள் வாழ்வில் இடர்ப்பாடுகளை எதிர்பார்க்கக்கூடும் என்பதை அறிய அனுமதியுங்கள், ஆனால் அவர்கள் இடர்ப்பாடுகளை விசுவாசத்துடன் சந்தித்தால், அவர்களின் பிரச்சனைகள் அவர்களை மேன்மையானவர்களாக்கும், கசப்பானவர்கள் ஆக்காது! அவர்கள் இளம் வயதில் இருக்கும்போதே இதைப் புரிந்துகொள்வார்களா? அனேகமாக மாட்டார்கள் - ஆனால் அதைப் போதியுங்கள் ... மற்றும் அதை உங்கள் வாழ்வில் செயல்விளக்கப்படுத்துங்கள். ஒருநாளில், அது உங்கள் பிள்ளைகள் கர்த்தருடன் தங்கியிருக்கிறார்களா அல்லது அவரை விட்டு விலகியிருக்கிறார்களா என்பதில் வேறுபாட்டை ஏற்படுத்தக்கூடும்.*

## *என்ன நடந்தாலும், பின்வரும் ஆச்சரியமான சத்தியத்தைப் பற்றிக்கொண்டிருங்கள்: தேவன் உங்களை அன்புகூருகிறார்! (5:5ஆ-8)*

*ஒவ்வொருவரும் அன்புகூரப்பட வேண்டும் என்று விரும்புகிறோம். ஒவ்வொருவரும், அவர்/அவள் யாருக்கேனும் முக்கியமானவராக இருப்பதாக உணர விரும்புகிறோம். "முணுமுணுத்தல் பரீட்சை" என்று அழைக்கப்படும் கதையொன்றுள்ளது. அது குழந்தையாயிருக்கையில் ஊனமுற்றிருந்து, உருவழிந்த நிலையில் இருந்த ஒரு பெண் எழுதிய கதையாகும். இளம்பெண் என்ற வகையில், அவள் எவரொருவரும் தன்னை அன்புசெய்வது சாத்தியமல்ல என்று உணர்ந்தாள். ஒரு பள்ளி ஆண்டின்போது, அவளது ஆசிரியர் அவளுக்கு கேட்டலில் ஒரு எளிய தேர்வைக் கொடுத்தார். கதவருகில் ஒரு மாணவி நின்று கொண்டிருக்கையில், தனது டெஸ்கில் அமர்ந்திருக்கையில் ஆசிரியர் ஒரு சில வார்த்தைகளை முணுமுணுப்பார். பின்பு அந்த மாணவி அவளது டெஸ்க் அருகில் வந்து தான் கேட்டது என்ன என்று கூறவேண்டும். அந்தப்பெண்ணின் முறை வந்தபோது, அவள் கதவருகில் நின்று முணுமுணுத்தலுக்காகக் காத்திருந்தாள். ஆசிரியர் கூறியது இதுதான்: "நீ எனது சிறுபெண்ணாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்." அந்த ஏழு வார்த்தைகள் தனது வாழ்வை மாற்றியதாக அந்தப் பெண்மணி பிற்பாடு எழுதினார்.[28]*

*உங்களை அன்புசெய்யப் பலரை நீங்கள் பெற்றிருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன் (யோவான் 13:34), ஆனால் நீங்கள் அவ்வாறு பெற்றிருந்தாலும் இல்லையென்றாலும், அவ்வாறு செய்கிற ஒருவர் இருக்கிறார் என்பதை நீங்கள் அறியமுடியும்: அவர் கர்த்தர். பவுல் சந்தித்த பல துன்பங்களின் மத்தியிலும் அவர் பின்வரும் ஒரு உண்மையை நம்பி ஏற்றுக்கொண்டிருந்தார்: அவரைத் தேவன் அன்புகூர்ந்தார்! இதுவே அவரது சமாதானத்திற்குக் காரணமாக, அவரது சந்தோஷத்திற்கு ஆதாரமூலமாக மற்றும் அவரது நம்பிக்கைக்கு அஸ்திபாரமாக இருந்தது.*

*நாம் நீதிமான்களாக்கப்படுவதின் ஆசீர்வாதங்களைப்பற்றிப் பேசியிருக்கிறோம். யாரேனும் ஒருவர், "ஆனால் இந்த ஆசீர்வாதங்கள் என்னுடையவைகளாக இருக்கமுடியும் என்பதற்கு நான் பெற்றுள்ள நிரூபணம் என்ன?" என்று ஆச்சரியப்படலாம். இங்கு உங்களுக்கு நிரூபணம் உள்ளது; இங்கு வாழ்வில் உங்களுக்கு என்ன நடந்தாலும் நீங்கள் பற்றிக்கொண்டிருக்கக்கூடிய உண்மைநிலை உள்ளது: தேவன் உங்கள்மீது* அன்புகூருகிறார் *- மற்றும் அவர் தமது அன்பைத் திரும்பத் திரும்பச் செயல்விளக்கப்படுத்தி இருக்கிறார். 5 முதல் 8 வரை உள்ள வசனங்களில், பவுல் தேவனுடைய அன்பின் இரண்டு வெளிப்பாடுகளைக் குறிப்பிட்டார்.*

**பரிசுத்த ஆவியானவரின் வரம் (வசனம் 5ஆ)**

*கிறிஸ்துவுக்குள் நமது நம்பிக்கையைப் பற்றித் தொடர்ந்து பேசியதில் பவுல் "தேவஅன்பு[29] நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது" என்று கூறினார் (வசனம் 5அ, ஆ). ரோமருக்கு எழுதிய நிருபத்தில் தேவஅன்பு என்பது இங்குதான் முதன்முறையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது திகைப்புக்குரிய உண்மையாகும். பவுலின் இந்நிருபம், தேவன் நமக்குக் கிருபையாகச் செய்துள்ள எல்லாவற்றைப் பற்றியும் பேசியுள்ளது, ஆனால் இப்போது இது தேவன்* ஏன் *அவற்றைச் செய்திருக்கிறார் என்று வெளிப்படுத்துகிறது: ஏனென்றால் அவர் நம்மீது* அன்புகூருகிறார்.

*Agape என்பதே அன்பு என்பதற்கான [கிரேக்க] வார்த்தையாகும்: இது நிபந்தனையற்ற அன்பு, அன்புகூரப்படுபவருக்கு மிகச்சிறந்தவற்றை நாடுகிற அன்பு என்பதாக உள்ளது. இந்த அன்பு "நமது இருதயங்களில் ஊற்றப்[30]பட்டிருக்கிறது." "ஊற்றப்படுதல்" என்பது ekcheo என்ற கிரேக்க வார்த்தையினுடைய நேரடி மொழிபெயர்ப்பாகும், இவ்வார்த்தை "வெளியே" (ek) என்பதுடன் "ஊற்றுதல்" (cheo) என்பதை ஒன்றிணைத்துப் பெறப்பட்டுள்ளது.[31] அந்த "ஊற்றப்படுதல்" என்பது, தேவன் தமது அன்பில் கஞ்சத்தனமாக இருப்பதில்லை என்பதை வலியுறுத்துகிறது. பவுல், "வறண்டுகிடக்கும் நாட்டுப்புறத்தில் விழும் பெரும் மழையின் உருவகத்தை" பயன்படுத்தினார்.[32] ஹியூகோ மெக்கார்டு என்பவரின் பின்வரும் நகைச்சுவையான விளக்கத்தை நான் விரும்புகிறேன்: "தேவன் தமது அன்பை ஊற்றும்போது, அவர் ஒரு* பெரிய *வாளியைப் பயன்படுத்தினார்!"[33]*

*பவுல், இந்த அன்பு "நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே ... நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது" என்று கூறினார் (வசனம் 5ஆ, இ). இந்த நிருபத்தில் கடந்து செல்வதாகப் பரிசுத்த ஆவியானவர் குறிப்பிடப்பட்டுள்ளார் (1:4; 2:29), ஆனால் இதுதான் கிறிஸ்தவர்களின் வாழ்வில் ஆவியானவர் கிரியை செய்வதாகக் கூறப்படும் முதல் குறிப்புரையாகும்.[34] ஒருவர்*

*நீதிமானாக்கப்படுகிறபோது, அவர் கிறிஸ்துவுக்குள் மாற்றப்படுகிறபோது, அவருடைய வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் பிரவேசிக்கிறார். "எல்லா விசுவாசிகளுக்கும் அவர்களின் மறுபிறப்பின்போது அதாவது அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம்பெறும்போது (நடபடிகள் 2:38 முதல்)"[35] - "பரிசுத்த ஆவியானவர் அருளப்படுகிறார்."[36]*

*பரிசுத்த ஆவியானவரின் கிரியை ரோமர் 8ம் அதிகாரத்தில் கலந் துரையாடப்படும். இவ்விடத்தில், அவரது செயல்பாட்டின் ஒரு அம்சம் குறிப்பிடப்பட்டுள்ளது: தேவ அன்பு நம் இருதயங்களுக்குள் ஆவியானவர் மூலமாக ஊற்றப்பட்டுள்ளது. இதை ஆவியானவர்* எவ்வாறு *செய்கிறார் என்பதை நாம் போதனரீதியாக எடுத்துரைக்க இயலாது. அவரது அற்புத மற்ற செயல்பாட்டைப் பொறுத்தமட்டில், பரிசுத்த ஆவியானவர் தாம் ஏவிய வசனத்தின் மூலமாகக் கிரியை செய்கிறார் என்பது ஒரு திறவுகோல் வழி யாக உள்ளது (எபேசியர் 6:17; 2 பேதுரு 1:21). அவர் கிறிஸ்தவர்களுக்குள்ளாக வாசம்பண்ணுகிறார் என்பதைப் பல வசனப்பகுதிகள் வலியுறுத்துகின்றன (எடுத்துக்காட்டாக, ரோமர் 8:9-11ஐக் காணவும்). மற்றும் பவுல் ரோமர் 8ல், பரிசுத்த ஆவியானவரின் கிரியையை தேவனுடைய அருளிரக்கத்துடன் நெருங்கிப் பிணைத்தபடியால் (வசனங்கள் 26-28), ஆவியானவர் "அருளிரக்கத்துடன்" கிரியை செய்கிறார் என்றும் நாம் கூறலாம். அவர் நமது வாழ்வை ஆசீர்வதிக்கும்படியாக நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துகிறார்.*

*பின்பு, பவுல் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது என்று கூறியபோது அவர் எதை அர்த்தப்படுத்தினார்? தேவன் தமது அளவற்ற அன்பின் ஆதாரமாக நமக்குப் பரிசுத்த ஆவியானவர் அருளப்படுகிறார் என்று அவர் அர்த்தப்படுத்தி இருக்கலாம் (நடபடிகள் 2:38; 5:32). பவுலின் கூற்றுப்படி, பரிசுத்த ஆவியானவரின் வரம் நமது புத்திரசுவிகாரத்தின் நிரூபணமாக உள்ளது (கலாத்தியர் 4:6). ஆவியானவர் "நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாக" தரப்பட்டிருக்கிறார் (எபேசியர் 1:14) - இது அந்த சுதந்தரத்திற்கு "முன்விலை" மற்றும் "உத்தரவாதம்" என்ற வகையில் நமக்கு அருளப்பட்டுள்ளது. இவ்வாறாக ரோமர் 5:5ஆ வசனம், "நமக்கு அருளப்பட்டுள்ள பரிசுத்த ஆவியானவரின் [தனிச்சிறப்புப் பற்றிய நமது அறிவின்] மூலமாக நமது இருதயங்களுக்குள் தேவ அன்பு ஊற்றப்பட்டிருக்கிறது" என்று பொழிப்புரை செய்யப்பட முடியும். இந்த விளக்கம் "நம்பிக்கை" பற்றிய பவுலின் வலியுறுத்தத்துடன் பிணைபடும்.*

*5ம் வசனம் தொடர்ந்து வரும் வசனங்களின் வெளிச்சத்தில் புரிந்து கொள்ளப்பட வேண்டியதாக உள்ளது என்பது இன்னொரு சாத்தியக்கூறு ஆகும். தேவன் தமது குமாரனைப் பலியாக ஒப்புக்கொடுத்ததில் தேவனு டைய அன்பின் மிகமேன்மையான உதாரணம் உள்ளது (5:6-8). இதைப்பற்றி நாம் ஆவியானவரால் ஏவப்பட்ட வேதவசனங்களின் மூலமாக அறிகிறோம். ஆகையால் பவுல், "[வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி அவரது அன்பை நாம் அறிகிறவகையில்] நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியானாலே தேவனு டைய அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது" என்று கூற முடிந்தது.*

*மேலே தரப்பட்டுள்ளது போன்ற விளக்கங்களில் பல விளக்கவுரை யாளர்கள் திகைப்படைகின்றனர். "நம்முடைய இருதயங்களில்" என்ற*

சொற்றொடர், ஆவியானவரின் பகுதியில் அதிக சுயமான மற்றும் நேரடியான செயல்பாட்டை அவசியப்படுத்துகிறது என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர். அவர்கள், தங்கள் இருதயங்களில் "இதமான உணர்வுகளுடன்" ஆவியானவர் பெருக்கெடுப்பதாக எழுதுகின்றனர்; சிலர் முற்றிலும் பாடல் இசைப்பவர்கள் ஆகின்றனர். நம்மீது தேவன் கொண்டுள்ள அன்பை அறிதல் என்பது இருதயத் திற்கு இதமான உணர்வுகளால் நம்மை நிரப்ப வேண்டும் என்பதை நான் மறுக்கவில்லை - ஆனால் "இதமான உணர்வுகள்" *பெருக்கெடுக்காத* வேளைகள் பற்றிய விஷயம் என்ன? அது தேவன் நம்மை இனியும் அன்புகூருவதில்லை என்று அர்த்தப்படுத்துகிறதா? இல்லையே. அது, உணர்வுகள் தடுமாறுகின்றன, அதாவது உணர்வுகள் நமது ஆவிக்குரிய சூழ்நிலைக்கு நம்பகமான அளவுகோல் அல்ல என்று மாத்திரம் அர்த்தப்படுகிறது.

**கிறிஸ்துவின் மரணம் (வசனங்கள் 6-8)**

தேவ அன்புக்கு அப்போஸ்தலரின் முதல் உதாரணம் தெளிவற்றதாக இருக்கலாம், ஆனால் இரண்டாவது உதாரணம் அப்படி இருப்பதில்லை. அது வரலாற்றில் குறிப்பிடப்பட்ட ஒரு உண்மையாக உள்ளது: ரோமச் சிலுவையில் கிறிஸ்துவின் மரணம். பவுல் பின்வருமாறு கூறினார்,

> அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார் (வசனம் 6-8).

இவ்வசனப்பகுதி [ஆங்கிலமொழியில்] "கிறிஸ்து நமக்காக மரித்தார்" என்ற வார்த்தைகளுடன் முடிகிறது. அது "கிறிஸ்து மரித்தார்" என்று மாத்திரம் கூறியிருந்தால், அது கவலைக்குரியதாக இருந்திருக்கும்; ஆனால் அது "கிறிஸ்து *நமக்காக* மரித்தார்" என்று கூறுகிறது - மற்றும் அது இரட்சிப்பாக உள்ளது! கிறிஸ்துவின் மரணம் தேவ அன்பின் செயல்விளக்கமாக உள்ளது. NCV வேதாகமம், "ஆனால் தேவன் நம்மீதுள்ள தமது அன்பை இவ்வாறு காண்பிக்கிறார்: கிறிஸ்து நமக்காக மரித்தார் ..." (வசனம் 8) என்று கூறுகிறது.

சிலவேளைகளில், பயங்கரமான விஷயங்கள் ஏன் நடைபெற்றுக் கொண்டிருந்தன என்று புரிந்துகொள்ளுதல் பவுலுக்குக் கடினமானதாக இருந்தி ருக்க வேண்டும். அவர் அவ்வப்போது, சகலமும் நன்மைக்கேதுவாக நடப்பது எப்படி என்று ஆச்சரியம்/திகைப்பு அடைந்திருக்க வேண்டும். இருப்பினும், அவை எல்லாவற்றினூடேயும், அவர் தம்மீது தேவன் கொண்டுள்ள அன்பில் தைரியமாயிருந்தார். அவர் [தேவன்] தமது குமாரனை சிலுவையில் மரிக்கும்படி அனுப்பியதன் மூலம் அந்த அன்பை நிரூபித்திருந்தார்! பவுல், கலாத்தியருக்குத் தமது நிருபத்தை எழுதச்சொல்லுகையில் அவரது குரலில் ஏறக்குறைய ஆச்சரியத்தைக் கேட்க முடியும்: "என்னில் அன்புகூர்ந்து, எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனை ..." (வசனம் 2:20).

நீங்களும் நானும் வாழ்வின் சோதனைகளில் உயிர்பிழைக்க வேண்டும் என்றால், நாம் பின்வரும் சத்தியத்தைப் பற்றிக்கொண்டிருக்க வேண்டும்:

"கிறிஸ்து *என்மீது* அன்புகூர்ந்து *எனக்காகத்* தம்மையே அர்ப்பணித்தார்." இதை நாம் எல்லாருடனும் பகிர்ந்துகொள்ள வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் திகைப்புக்குரிய இந்தச் சத்தியத்தை நமது பிள்ளைகளுக்கு கற்பிக்க வேண்டும். வாழ்வில் அவர்களுக்கு என்ன நடந்தாலும், அவர்கள் பின்வரும் சத்தியத்தைப் பற்றிக்கொண்டிருக்க முடியும்: தேவன் அவர்கள்மீது *அன்புகூருகிறார்!* அவர்களுக்காக அவர் தமது குமாரனை அனுப்பியபோது வழக்கிட இயலாத நிரூபணத்தைக் கொடுத்தார்!

## முடிவுரை

உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் எவ்வகையான பாரம்பரியத்தை விட்டுச் செல்லுவீர்கள்? சிலர் தங்கள் பிள்ளைகளுக்கு பணம் அல்லது சொத்துக்களை விட்டுச்செல்லுதல் பற்றி அக்கறையாயுள்ளனர். "பொருள்கள்" என்பவை தாங்கள் தரக்கூடிய மிகமுக்கியமான பாரம்பரியம் அல்ல என்பதைப் பலர் அறியாதிருக்கின்றனர். ஒரு சவ அடக்கத்தில் பிரசங்கிக்கும்படி என்னிடம் கேட்டுக்கொள்ளப்படும்போது, அடக்கத்திற்கு முன்னர் அந்தக் குடும்பத்தாரைச் சந்திக்க நான் முயற்சி செய்வதுண்டு. இறந்துபோனவரின் பிள்ளைகளிடத்தில் நான், "உங்கள் அம்மாவை [அல்லது அப்பாவை] பற்றி நீங்கள் ஒரு வார்த்தையில் எப்படி விவரிப்பீர்கள்?" என்று கேட்பேன். பொதுவாக நான் "நேர்மையானவர்," "பொறுமையானவர்," மற்றும் "அன்புள்ளவர்" என்பது போன்ற வார்த்தைகளைக் கேட்பதுண்டு. ஒரு மகனோ அல்லது மகளோ, "பணக்காரார்" அல்லது "வெற்றிநிறைந்தவர்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியதை நான் ஒருக்காலும் கேள்விப்பட்டதில்லை. நான் இந்தப் பாடத்தில், நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்குப் பாரம்பரியமாக விட்டுச்செல்லக்கூடிய மிகவும் விலைமதிப்புள்ள விஷயங்களாகப் பின்வரும் மூன்று சத்தியங்களை உங்களுக்கு ஆலோசனையாகத் தெரிவித்துள்ளேன்:

#1 உண்மையான சமாதானம் என்பது போராட்டம் இல்லாத போதல்ல, ஆனால் கர்த்தரின் பிரசன்னத்தில்தான் காணப்படுகிறது.

#2 இடர்பாடுகள் உங்கள் மேன்மையாக்குகிறதா அல்லது கசப்புள்ளவர்களாக்குகிறதா என்பதை நீங்களே தீர்மானிக்கிறீர்கள்.

#3 என்ன நடந்தாலும், பின்வரும் ஆச்சரியமான சத்தியத்தைப் பற்றிக் கொண்டிருங்கள்: தேவன் உங்கள்மீது அன்புகூருகிறார்!

நீங்கள் இந்த சத்தியங்களை உங்கள் பிள்ளைகளுக்குப் போதிப்பது மட்டுமின்றி, இவற்றை நீங்களே விசுவாசிக்கிறீர்கள் என்பதை உங்கள் வாழ்வினால் *காண்பிக்கவும்* வேண்டும். நீங்கள் ஒரு கிறிஸ்தவர் ஆகி பின்பு கர்த்தரில் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ள கிறிஸ்தவராக *வாழ வேண்டும்.* நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இல்லையென்றால் அல்லது நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு முன்பாக சரியான வகையிலான உதாரணமாயிருக்கத் தவறியிருந்தால், நீங்கள் இன்றைக்கே ஆவிக்குரிய இந்தத் தேவைகளைக் குறித்து அக்கறை கொள்ளும்படி உங்களுக்காக நான் ஜெபிக்கிறேன்!

## பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

*இந்தப் பிரசங்கத்தைப் பயன்படுத்தும்போது, உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு, ஒருவர் எவ்வாறு கிறிஸ்தவராகிறார் என்பது பற்றிக் கூறுங்கள் (யோவான் 3:16; மாற்கு 16:16). மேலும், தவறு செய்கிற கிறிஸ்தவர் கர்த்தரிடத்தில் எவ்வாறு திரும்பமுடியும் என்பது பற்றியும் கூறுங்கள் (நடபடிகள் 8:22; 1 யோவான் 1:9).*

*இந்தப்பாடத்தின் பிரதானத் தலைப்புகள் உங்கள் உரையைக் கேட்பவர்கள் நினைவில் வைத்துக்கொள்ளக் கூடும்படிக்கு "பழமொழிகளாக" இருக்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ளன. அவற்றை நீங்கள் அட்டைத் துண்டுகளில் எழுதி, ஒவ்வொரு சத்தியத்தைப் பற்றிப் பேசும்போதும் அந்தந்த அட்டையை காட்சிப்படுத்த விரும்பலாம்.*

*சமீபத்தில் நான் இந்த எடுத்துரைப்பை, தங்கள் வீடுகளில் பிள்ளைகள் யாரையும் கொண்டிராத முதிர்வயதுக் கிறிஸ்தவப் பெண்களின் குழு ஒன்றிற்குப் பிரசங்கித்தேன். அவர்களுக்கு, நான்* அவர்கள் *அறிய வேண்டிய மூன்று சத்தியங்கள் பற்றிப் பேசினேன்.*

*இந்தப்பாடம் மாறுபட்ட வழிகளில் அணுகப்பட முடியும். பல எழுத்தாளர்கள் 5:1-11ன் மீதான தங்கள் பாடங்களுக்கு "நீதிமானாக்கப்படுதலின் ஆசீர்வாதங்கள்" என்பது போன்று தலைப்புக் கொடுக்கின்றனர். ஆசீர்வாதங்களின் பட்டியல்கள் மாறுபடுகின்றன; சிலர் இவ்வசனப் பகுதியில் ஒரு டஜன் வரையிலும் ஆசீர்வாதங்களைக் கண்டறிகின்றனர். "மேன்மைபாராட்டுதல்" ("அகம்மகிழ்தல்," "பெருமைபாராட்டுதல்") என்ற வார்த்தை மூன்று வசனங்களில் காணப்படுவதால் (வசனங்கள் 2, 4, 11), அவைகள் பிரதானக்கருத்துக்களுக்குப் பயன்படுத்தப்பட முடியும். "நீங்கள் பெருமைபாராட்ட என்ன இருக்கிறது?" என்பது அப்படிப்பட்ட எடுத்துரைப்புக்குச் சாத்தியமான ஒரு தலைப்பாக இருக்கிறது. "நம்பிக்கை" என்பது திறவுகோல் ஆய்வுக்கருத்தாக உள்ளது (வசனங்கள் 2, 4, 5), எனவே உங்கள் குறிப்புரைகள் அந்தத் தலைப்பை மையங்கொண்டிருக்க முடியும். நீங்கள், "சமாதானம்" பற்றிப் பேசவும் இவ்வசனப்பகுதியைப் பயன்படுத்த முடியும் (வசனம் 1): "... யால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்" (இவ்வசனப்பகுதியின் ஆசீர்வாதங்களைப் பட்டியலிடவும்).*

*"விசுவாசம், நம்பிக்கை, மற்றும் அன்பு" ஆகியவற்றைப் பற்றிப் போதிப்பதற்குக்கூட நீங்கள் 5:1-8ஐப் பயன்படுத்த முடியும். பவுல் அந்த மாபெரும் மூன்று ஆய்வுக்கருத்துக்களை அடிக்கடி ஒன்றிணைத்தார் (1 கொரிந்தியர் 13:13; கலாத்தியர் 5:5, 6; கொலோசெயர் 1:4, 5; 1 தெசலோனிக்கேயர் 1:3 ஆகியவற்றைக் காணவும்). நமது வேதவசனப்பகுதியில் அவர் "விசுவாசத்திலிருந்து" (வசனம் 1) "நம்பிக்கை"க்கும் (வசனங்கள் 2, 4, 5), "அன்புக்கும்" (வசனங்கள் 5, 8) கடந்து சென்றார்.*

*விருப்பம் இருந்தால், இந்தப்பாடமும் அடுத்த பாடமும், 5:1-11ஐக் கூறி முடிக்கும் ஒரே எடுத்துரைப்பாக ஒன்றிணைக்கப்பட முடியும். "கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய வாழ்வு" என்பது ஒரு அணுகுமுறையாக இருக்க முடியும், அது*

*பின்வரும் பிரிவுகளைக் கொண்டிருக்கலாம்: ''புதிய சிலாக்கியங்கள்'' (வசனங்கள் 1, 2), "புதிய எண்ணப்போக்குகள்" (வசனங்கள் 3-5அ), மற்றும் "புதிய உறுதிப்பாடு" (வசனங்கள் 5ஆ-11). "நீங்கள் கிறிஸ்தவராக இருப்பதால் பெறுவது இதுவே'' என்பதன்மீதும் நீங்கள் பின்வரும் தலைப்புக்களைப் பயன்படுத்திப் பிரசங்கிக்க முடியும்: "எழுச்சியூட்டும் விளைவுகள்" (வசனங்கள் 1, 2), ''ஊக்கமூட்டும் ஆறுதல்'' (வசனங்கள் 3-5அ), மற்றும் "நீடித்திருக்கும் உறுதிப்பாடு" (வசனங்கள் 5ஆ-11).*

*நான் இந்த எடுத்துரைப்பைத் ''தனித்து நிற்கும்'' பிரசங்கமாகப் பயன்படுத்தும்போது, பிள்ளைகளுக்குப் போதிக்க* நான்கு சத்தியங்கள் *பற்றி நான் பேசுகிறேன். 1ம் வசனத்தில் "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்'' பற்றிய பவுலின் திறப்பு வார்த்தைகளைக் கூறி முதலாவதாக நான் பின்வரும் கருத்தை கூடுதலாக்கிக்கொள்ளுவதுண்டு: "தேவனுடன் உங்கள் உறவுமுறை என்பதைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது வேறு எதுவும் இல்லை.''*

குறிப்புகள்

[1]William Barclay, *The Letter to the Romans*, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 72. [2]R. C. Bell, *Studies in Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1957), 43. [3]This approach was suggested in a series by Evertt Huffard on "A Spiritual Heritage," presented at Eastside church of Christ, Midwest City, Oklahoma, 24-25 April 2004. [4]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World*, The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 139. For a survey of some of the ways the world is seeking "peace," see James Burton Coffman, *Commentary on Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1973), 189-91. [5]*பழங்காலக் கையெழுத்துப் பிரதிகள் பலவற்றில், "தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்" என்பதற்குப் பதிலாக "சமாதானம் பெற்றிருப்போமாக" என்றுள்ளது. கிரேக்க மொழியில் இவ்விரு வாசிப்புகளுக்கும் இடையில் ஒரே ஒரு எழுத்துத்தான் வேறுபாடாக உள்ளது:* ''o'' *என்ற நெடிய உயிர் எழுத்துக்குப்பதிலாக* ''o'' *என்ற குறில் உயிர் எழுத்து. பெரும்பான்மையான மொழிபெயர்ப்பாளர்கள், இதன் சந்தர்ப்பப்பொருளானது ஒரு புத்திமதி என்பதற்குப் பதிலாக ஒரு கூற்றாகவே உள்ளது என்று நினைக்கின்றனர்.* [6]Larry Deason, *"The Righteousness of God": An In-depth Study of Romans*, rev. (Clifton Park, N.Y.: Life Communications, 1989), 134. [7]*சில கிரேக்கக் கையெழுத்துப்பிரதிகளில் "விசுவாசத்தினால்" என்ற வார்த்தை இல்லை, ஆனால் இந்தச் சொற்றொடர் கூறப்படாவிட்டாலும் புரிந்துகொள்ளப் பட்டுள்ளது (வசனம் 3ஐக் காணவும்).* [8]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 7. "Access" *என்பது சாத்தியமான இன்னொரு மொழி பெயர்ப்பாக உள்ளது. அந்த மொழிபெயர்ப்பு பயன்படுத்தப்படுமென்றால், இயேசு அந்த அணுகும்நெறிக்கு வழியாகச் சித்தரிக்கப்பட்டுள்ளார் ("வாசல்"; யோவான் 10:9).* [9]*முக்கியமான நபர் யாருக்கேனும் நீங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தால், அதை இவ்விடத்தில் நீங்கள் ஒரு விவரிப்பாகப் பயன்படுத்தலாம்.* [10]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 219.

[11]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago: University of Chicago

Press, 1957), 886. (Emphasis mine.) [12]John Newton, "Amazing Grace," *Songs of Faith and Praise*, comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [13]David Mowday, devotional talk presented at Eastside church of Christ, Midwest City, Oklahoma, 7 December 2003. [14]William Barclay, *New Testament Words* (Philadelphia: Westminster Press, 1974), 76. [15]*மற்ற இரண்டு வசனப்பகுதிகள், யாக்கோபு 1:2, 3 மற்றும் 1 பேதுரு 1:6, 7 ஆகியவையாகும்.* [16]Adapted from Paul Lee Tan, *Encyclopedia of 7,700 Illustrations* (Rockville, Md.: Assurance Publishers, 1979), 1508. [17]Vine, 17, 643. [18]Barclay, *Letter to the Romans*, 73. [19]Adapted from Dale Hartman, class on 1 Peter taught at Eastside church of Christ, Midwest City, Oklahoma, 11 January 2004. [20]Bell, 44.

[21]KJV *மற்றும் தமிழ் வேதாகமங்களில்* "perseverance" *என்பதற்கு* "patience" [*"பொறுமை"*] *என்ற வார்த்தை போடப்பட்டுள்ளது.* KJV *வேதாகமம், இரண்டு கிரேக்க வார்த்தைகளை* "patience" *என்ற ஆங்கில வார்த்தையாக மொழிபெயர்த்துள்ளது. (Makrothumia என்ற) ஒரு வார்த்தை, கடினமான மக்களைக் குறித்துப் பொறுமையாயிருக்க வேண்டியதைக் குறிப்பிடுகையில்* (*hupomone என்ற) இன்னொரு வார்த்தை (இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது) கடினமான சூழ்நிலைகளின்கீழ் பொறுமையுடன் (சகிப்புத்தன்மையுடன்) இருத்தலைக் குறிக்கிறது.* [22]*Hupo என்றால் "கீழ்" என்று அர்த்தப்படுகிறது, மற்றும் meno என்றால் "தங்கியிருக்க"* (Vine, 462) *அல்லது "நிலைத்திருக்க" என்று அர்த்தப்படுகிறது. நான் "தங்கியிருக்க" என்பதற்குப் பதிலாக "நிலைத்திருக்க" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறேன்.* [23]Dale Hartman, sermon on "Patience" preached at Eastside church of Christ, Midwest City, Oklahoma, 18 January 2004. [24]Barclay, *Letter to the Romans*, 73. [25]Hartman, class, 15 February 2004. [26]Morris, 220, n. 11. [27]Adapted from Jim Townsend, *Romans: Let Justice Roll* (Elgin, Ill.: David C. Cook Publishing Co., 1988), 37. [28]Stott, 142. [29]*இது தேவன்மீதான நமது அன்பைக் குறிப்பிடுவதாக இருக்கலாம், ஆனால் பவுல் இவ்விடத்தில், தேவன் நம்மீது கொண்டுள்ள அன்பைப்பற்றியே பேசுகிறார் என்பதைச் சந்தர்ப்பப்பொருள் சுட்டிக்காண்பிக்கிறது (வசனம் 8).* [30]KJV *வேதாகமத்தில்* "shed abroad" *என்றுள்ளது.*

[31]*இதே வார்த்தை நடபடிகள் 2:33ல் பயன்படுத்தப்பட்டுள்ளது, அவ்விடத்தில் இது அப்போஸ்தலர்களுக்குத் தரப்பட்ட அற்புத வரங்களைக் குறிக்கிறது. இவ்விடத்தில், இது ஒவ்வொரு கிறிஸ்தவர்மீதும் பொழியப்படுகிற தேவனுடைய அன்பைக் குறிக்கிறது.* [32]James D. G. Dunn, *Romans 1-8,* Word Biblical Commentary, vol. 38 (Dallas: Word Books, 1988), 253. [33]Hugo McCord, discussion of Romans 5 presented to students at Oklahoma Christian College (now University), n.d., cassette. [34]*நமது வேதவசனப்பகுதி நீதிமானாக்கப்படுதலின் ஆசீர்வாதங்களைப் பற்றிப் பேசுகிறபோது, அது தேவத்துவத்தில் உள்ள பிதா, குமாரன், மற்றும் பரிசுத்த ஆவியாகிய எல்லாருடைய கிரியைகளைப் பற்றியும் குறிப்பிடுகிறது என்று நீங்கள் இவ்விடத்தில் உரைக்க விரும்பலாம்.* [35]J. W. McGarvey and Philip Y. Pendleton, *Thessalonians, Corinthians, Galatians and Romans* (Cincinnati: Standard Publishing, n.d.), 331. [36]Coffman, 197.